தமிழ் நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1973 மார்ச் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், **திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

திரைப்படக் கொட்டகைகளுக்கிடையே உள்ள தூரம்

* 521 **வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சினிமா விதிகளின்கீழ் ஒரு நிரந்தரக் கொட்டகைக்கும் ஒரு டூரிங் கொட்டகைக்கும் இடையில் இருக்க வேண்டிய தூரம் Semi-Permanenet கொட்டகைகளுக்கும் பொருந்துவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு நிரந்தரக் கொட்டகைக்கும் ஒரு டூரிங் கொட்டகைக்கும் இடையில் இருக்க வேண்டிய தூரம் 1.609 கிலோ மீட்டர். அதே தூரம்தான் ஒரு Semi-Permanenet கொட்டகைக்கும் ஒரு டூரிங் கொட்டகைக்கும் இடையில் இருக்க வேண்டுமென்று வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, ஜனத்தொகை அதிகமுள்ள நகர்ப்புறங்களுக்கு இந்த விதி பொருத்தமாக இருக்கிறதா ? இந்தத் தூரத்தை ஜனத்தொகை அடிப்படையில் மாற்றி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: செமி-பர்மனென்ட் தியேட்டர் 'ஏ' க்ளாஸ் நகராட்சியில் அமைக்கத் தடை இருக்கிறது. அங்கு அமைக்க முடியாது.

[1973 மார்ச் 27

திரு. ஆ. பரந்தாமன் : செமி-பர்மனென்ட் தியேட்டர்கள் என்று ஆரம்பித்தாலும் அவை ஐந்தாண்டுகளில் பர்மனென்ட் ஆகின்றன. ஆகவே இந்தத் தூரத்தை மீண்டும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செமி-பர்மனென்ட் தியேட்டர்கள் என்று அமைக்கப்படுவது எல்லாம் நிரந்தரமான தியேட்டர்களாகும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே அதைக் கணக்கிட்டு தூரத்தைக் குறைப்பது முடியாது.

திரு. ந. தருமலிங்கம் : சினிமாக் கொட்டகைகளில் புகை பிடிக்கக்கூடாது என்ற விதி இருந்தும் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

திரு. வை. பாலசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நிரந்தர சினிமாக் கொட்டகைகளுக்கும், செமி-பர்மனென்ட் கொட்டகைகளுக்கும் அரசு உதவிடுவதாக அறிகிறேன். அதேபோல டூரிங் கொட்டகை நடத்துகிறவர்களுக்கும் அரசு உதவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செமி-பர்மனென்ட் தியேட்டர் அமைக்கிறவர்களுக்குத்தான் உதவியாக குழு அமைக்கப்பட்டிருக்கிறது. டூரிங் டாக்கீசுக்கு உதவி இல்லை. உத்தேசமும் கிடையாது.

பத்திரிகைகளில் ஆபாசச் செய்திகள்

* 522 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலுணர்வைத் தூண்டிவிடும் வகையில் பெண்களின் புகைப்படங்களையும், ஆபாசச் செய்திகளையும் வெளியிடும் பத்திரிகைகள் தற்போது பெருகியிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், இப்பத்திரிகைகளைத் தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?